ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2487/40 - 2026 මැයි මස 08 වැනි සිකුරාදා - 2026.05.08

*2487/40 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் மீரிகம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

மீரிகம பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி அனுமதியின்றி மூன்று மாதம் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், மீரிகம பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திருமதி அஹங்கம விதானலாகே நுவன்தி என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் - செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான மீரிகம பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திருமதி. ஜயசிங்ஹ ஆரச்சிகே வசந்தா இந்திரானி ஜயசிங்ஹ என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

மீரிகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் விதான அப்புஹாமில்லாகே ரவீந்திர விக்ரமசிங்ஹ ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1)(ஆ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திருமதி ஜயசிங்ஹ ஆரச்சிகே வசந்தா இந்திரானி ஜயசிங்ஹ என்பவர் மீரிகம பிரதேச சபைக்கு தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டப்ளிவ்.ஏ.ரவீந்திர விக்ரமசிங்ஹ,**
**தெரிவத்தாட்சி அலுவலர்,**
**மீரிகம பிரதேச சபை.**

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**கம்பஹா.**
**2026,மே மாதம் 08.**

EOG - 05 - 0049